சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் - நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் சிறப்பு உதவி காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து பணியிடையே காலமான திரு. இரா.இராயர் என்பவரின் இளைய மகன் திரு. R.பாலாஜி என்பவருக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டது - இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை - ஆணை வெளியிடப்படுகிறது.

---

மனித வள மேலாண்மை (என்) துறை

அரசாணை (3டி) எண்.05

நாள் : 21.04.2022
சுபகிருது, சித்திரை - 08
திருவள்ளுவர் ஆண்டு - 2053
படிக்க :

1. இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககக் கடித ந.க.எண்.அ5/19519/2016, நாள் 24.08.2021 மற்றும் 28.02.2022.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.

*******

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் கீழ் செயல்படும் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் சிறப்பு உதவி காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. இரா.இராயர் என்பவர் 30.01.2015 அன்று பணியிடையே காலமானதால், அவரது வாரிசுதாரராகிய இளைய மகன் திரு. R.பாலாஜி என்பவர் கருணை அடிப்படையில் அரசுப் பணி நியமனம் வழங்குமாறு கோரியிருந்தார். அவரது குடும்ப வறிய நிலையைக் கருத்தில் கொண்டும், கருணையடிப்படையிலான பணி நியமனத்திற்கென்று இராசிபுரம் வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சான்றிதழ் அடிப்படையிலும் காலமான அரசுப் பணியாளரின் வாரிசுதாரரான (இளைய மகன்) திரு. R.பாலாஜி என்பவருக்குக் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்கலாமென முடிவெடுக்கப்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் இளநிலை உதவியாளராக 28.10.2020 அன்று திரு. R.பாலாஜி என்பவருக்கு பணி நியமனம் வழங்கப்பட்டது என்றும், அதனைத் தொடர்ந்து திரு. R.பாலாஜி அவர்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் 28.10.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகின்றார் என்றும் தெரிவித்து, அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன்முறை செய்யுமாறு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்கக இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

(த.பி.பா)

2. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்கக இயக்குநரின் கருத்துருவை கருணை அடிப்படையிலான பணி நியமனம் தொடர்பாக நடைமுறையிலுள்ள விதிகள் / அரசாணைகளின்படி அரசு கவனமுடன் பரிசீலித்து, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திரு. R.பாலாஜி, என்பவரது பணியினை, அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் இளநிலை உதவியாளர் பணியில் 28.10.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை ஏதும் நிலுவையிலிருப்பின் அவற்றை நடைமுறையில் உள்ள விதிகளின்படி பெறத் தனியர் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை, முறையே தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (க்யூ.-2) துறை மற்றும் மனித வள மேலாண்மை (ஜி) துறை ஆகியவற்றின் அலுவல் சார்பற்ற எண்.6118/க்யூ.-2/2022, நாள் 07.04.2022 மற்றும் அலுவல் சார்பற்ற எண்.e file/560/ஜி2/2022, நாள் 18.04.2022-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மைதிலி க.ராஜேந்திரன்
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம், ஆலந்தூர்,
சென் னை - 600 016.
திரு. R.பாலாஜி, இளநிலை உதவியாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம், ஆலந்தூர், சென்னை - 600 016.
(ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை – 600 018.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 600 035.

நகல்:
அரசு செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர்,
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (க்யூ.-2) துறை,
சென்னை – 600 009.
மனித வள மேலாண்மை (ஜி2) துறை, சென் னை- 600 009.
மனித வள மேலாண்மை (நி.சீ-II) துறை, சென்னை – 600 009. (3 நகல்கள்)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

21/4/2022

பிரிவு அலுவலர்.